www.tamilarangam.net

# சாவிற்குள் வாழ்வோர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சாவிற்குள் வாழ்வோர்

## காப்பு நிதி

எம் உயிரிலும் இனிய தமிழ் உறவுகளே!

எம்மினத்தின் துன்ப வரலாறு மீண்டும் தொடங்கிவிட்டது. அரச படைகளின் கொலைவெறி எம்மை வயது வேறுபாடின்றி பலி எடுக்கின்றது. குழந்தைகள் கொல்லப்படுகின்றனர், பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு சடலமாக்கப்படுகின்றனர். கொல்லப்பட்ட ஆண்களும் சிறுவர்களும் தொங்கவிடப்படுகின்றனர். மகிந்த ராஜபக்ச தமிழின அழிப்பில் குறிவைத்து விட்டார். எம்மை ஒட்டுமொத்தமாக அழிப்பதுதான் அவருடைய நாசகாரத் திட்டம்.

இதற்கெல்லாம் முடிவே இல்லையா?

தமிழினம் அழிவதைத் தடுக்க முடியாதா?

இன்னுமேன் பொறுக்க வேண்டும்?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

எம்மால் எதிரியின் சவாலை எதிர்கொள்ள முடியுமென்பது உறுதி.

www.tamilarangam.net

இன்னும் சிறிது காலத்திற்குள் தமிழீழம் இலங்கைத்தீவில் தோன்றும். அது உறுதி. நாங்கள் அதன் பிறப்பிற்காகப் போராடுவோம்; அது இயற்கை. அதற்காக எம் இரத்தத்தால் நாம் விலை கொடுப்போம்; அது எமக்குச் சர்வசாதாரணம். எங்களில் சிறந்தவர்கள் பலர் மடிய நேரிடலாம்; அது நிச்சயம். ஆனால் எங்களை ஆக்கிரமிப்போர் எவ்வளவு படைப்பலம், ஆட்பலத்துடன் வந்தாலும் எங்கள் மன உறுதி தளர்ச்சி அடையாது.

ஆக்கிரமிப்பாளர்களின் பீரங்கிகளுக்கும், விமானக் குண்டுவீச்சுக்கும் முகம்கொடுக்கக்கூடிய கனரக ஆயுதங்களைப் பெற பெருமளவு பணம் தேவை. **எமது அன்புக்குரிய புலம்பெயர் வாழ் தமிழ்மக்களே!** நாங்கள் மிகக் குறுகிய நிகழ்காலத்தில் வாழ்கிறோம். நாம் இதைச் சொல்லும்போது எத்தனை தமிழினப் படுகொலைகள் இங்கு நடந்தேறிக்கொண்டிருக்கின்றனவோ தெரியவில்லை. இங்கு மக்கள் சாவிற்குள் வாழ்வோராய் உயிரைக் கையில் பிடித்தபடி வாழ்கின்றனர்.

நாம் எமது பணியைச் சரிவர நிறைவேற்றுவதற்கு உலகத்தமிழரின் பேராதரவு தேவைப்படுகின்றது. நாங்கள் போராடியே தீருவோம். சிங்கள தேசம் ஒருபோதும் தமிழர்களுக்குச் சாதகமான எந்த ஒரு முடிவையும் தரப்போவதில்லை. இது கடந்தகால வரலாறு. நாம் போராடித்தான் எமது உரிமையை நிலைநாட்டவேண்டும். தற்போது நீங்களே ஒரு முடிவு செய்துகொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது. அதாவது சிங்கள அரசின் இனவெறிப் படுகொலைகளை எம்மக்கள் மீது தொடரவிடுவதா? அல்லது விடுதலையை விரைந்து வென்றெடுத்து சாவிற்குள் வாழும் எமது தமிழீழ மக்களை மீட்டெடுப்பதா? என்பதைத் தீர்மானிக்கலாம்.

**இந்த இக்கட்டான வேளையில் நீங்கள் தந்துதவி உங்கள் உறவுகளைக் காத்துநிற்பீர்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. சாவிற்குள் வாழ்வோர் நிதியில் பங்கெடுத்து எமது மக்ளின் உயிருக்கு மதிப்பளித்து விடுதலைக்கு உதவுமாறு வேண்டிநிற்கிறோம்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்